சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – நெடுஞ்சாலைத் துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ் சென்ற அரசு ஊழியர் திரு.டி.மாரிகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.எம்.செல்வகுமார் என்பவர் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண். 24 நாள்.29.06.2021.
பிலவ, ஆனி 15,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 26.02.2021.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25 கடித எண்.58660/நிர்.1(2)/2001, நாள் 10.03.2021.

---------

ஆணை:–

நெடுஞ்சாலைத் துறையில் தலைமைப் பொறியாளர் (தே.நெ) சென்னை அலுவலகத்தில் நேர்முக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.டி.மாரிகிருஷ்ணன் என்பவர் 16.02.2001 அன்று பணியிடையே காலமானார். அவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் 17.11.1972 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அவரது மகன் திரு.எம்.செல்வகுமார் என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் நெடுஞ்சாலைத் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 26.08.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 19 ஆண்டுகள் 8 மாதங்கள் ஆகும். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு

தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.எம்.செல்வகுமார் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 26.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத்துறையில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.எம்.செல்வகுமார் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 26.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

தீரஜ் குமார்
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25.
திரு.எம்.செல்வகுமார், இளநிலை உதவியாளர்(நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை,
சென்னை–25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை–600018.

**நகல்:–**
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(C.No.3816/HM1/2021)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

30/06/2021

**பிரிவு அலுவலர்**

30/6/2021